# பரதநாட்டியம் - தரம் 11

## பகுதி I

**1. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. ''சின்ன சின்ன பாதம் வைத்து கண்ணா நீ வா'' என்ற பாடலில் வரும் பாவம் யாது?
   1. மதுர பாவம் 2. வாத்ஸல்ய பாவம் 3. பக்தி பாவம் 4. தாசிய பாவம்
2. தனது உடலை மலராக நினைத்து கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது போல் அமைந்த உருப்படி?
   1. கீர்த்தனை 2. பதம் 3. ஜதீஸ்வரம் 4. அலாரிப்பு
3. ஜதீஸ்வரத்தை மெருகூட்ட செய்யும் அடவு யாது?
   1. நாட்டடவு 2. தாதெய்தெய்த அடவு 3. மெய்யடவு 4. குத்தடவு
4. திரிபுர தாண்டவம் ஆடிய சபை எது?
   1. சித்திர சபை 2. சிற்சபை 3. தாமிர சபை 4. கனக சபை
5. வழுவூர் இராமையாப்பிள்ளை நிறுவிய ஸ்தாபனத்தின் பெயர் யாது?
   1. கலாமண்டலம் 2. வழுவூர் நுண்கலை மன்றம் 3. நடனப் பள்ளி 4. இசைக்கல்லூரி
6. ஆண்மைத் தன்மை திரிந்த பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய கூத்து எது?
   1. கடையர் கூத்து 2. குடைக் கூத்து 3. பேடிக் கூத்து 4. துடிக் கூத்து
7. சலாமுரே, நமோஸ்துதே என முடிவுறும் சொற்களைக் கொண்ட பரத உருப்படி எது?
   1. அலாரிப்பு 2. வர்ணம் 3. ஜாவளி 4. சப்தம்
8. போர்த்தொழிலை சித்தரித்து ஆடும் கிராமிய நடனம் எது?
   1. கொழுந்து நடனம் 2. வாள் நடனம் 3. அறுவடை நடனம் 4. குறத்தி நடனம்
9. தமது ஆசை பூர்த்தியாகும் வரை உணவை வெறுக்கச் செய்யும் பாணம் எது?
   1. தாமரை 2. முல்லை 3. அசோகம் 4. சூதம்
10. கதகளியில் பயன்படுத்தும் இசை யாது?
    1. சோபன இசை 2. ஹிந்துஸ்தானி இசை 3. கர்நாடக இசை 4. கேரள இசை
11. சித்தேந்திர யோகி என்பவரால் உருவாக்கிய சாஸ்திரிய நடனம் யாது?
    1. பரதம் 2. கதகளி 3. மணிப்புரி 4. குச்சுப்புடி
12. ஹாஸ்ய ரஸத்தின் ஸ்தாயி பாவம் யாது?
    1. பீபத்ஸம் 2. சிரிப்பு 3. சோகம் 4. வீரம்
13. தாளம் பிடித்த வலது கை கபித்தம் எந்தக் கடவுளைக் குறிக்கும்?
    1. சரஸ்வதி 2. சிவன் 3. விஷ்ணு 4. இலட்சுமி
14. இந்தியாவின் தேசிய வாத்தியமாக கொள்ளப்படும் இசைக்கருவி யாது?
    1. புல்லாங்குழல் 2. வீணை 3. மிருதங்கம் 4. தவில்
15. தஞ்சை நால்வருள் வயலின் வாசிப்பதில் சிறந்தவர் யார்?
    1. வடிவேலு 2. பொன்னையா 3. சிவானந்தம் 4. சின்னையா
16. கலாநிதி. க. பொன்னையாபிள்ளையின் நினைவாக வெளியிட்ட நூல் எது?
    1. இசைநூல் 2. இலக்கண நூல் 3. தமிழிசைக் கருவூலம் 4. நடன சாரம்
17. பல்லவர் காலத்தின் சிறந்த ஓவியம் யாது?
    1. அஜந்தா 2. சித்தன்ன வாசல் 3. உதயகிரி 4. கண்டகிரி
18. வேணு, முரளி என அழைக்கப்படும் இசைக்கருவி யாது?
    1. மிருதங்கம் 2. வயலின் 3. வீணை 4. புல்லாங்குழல்
19. கேரள மாநிலத்தித்திற்குரிய லாஸ்ய நடனம் எது?
    1. குச்சுப்புடி 2. மோகினியாட்டம் 3. மணிப்புரி 4. ஒடிசி
20. இதயம் போன்று விளங்கும் பரதநாட்டிய உருப்படி எது?
    1. அஷ்டபதி 2. தில்லானா 3. வர்ணம் 4. கீர்த்தனை

## பகுதி II

1. ஜதீஸ்வரத்தின் மூன்றாவது கோர்வையை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.
2. சாஸ்திரிய நடனங்களில் கதகளி நடனம் பற்றி விளக்கமாக எழுதுக.
3. சிறுகுறிப்பு எழுதுக.
   1. வாள் நடனம் 2. பஞ்சபாணம் 3. தாண்டவம்
4. தஞ்சாவூர். க. பொன்னையாபிள்ளையின் வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிடுக.
5. வரலாற்றுக் காலத்தில் பல்லவர் கால நடனக் கலை பற்றி ஆராய்க.
6. பின்வரும் பரதநாட்டிய கச்சேரி உருப்படிகளை விளக்குக.
   1. வர்ணம் 2. கீர்த்தனை 3. தில்லானா
7. மாதவியின் பதினொரு வகை ஆடல்களையும் ஆடப்பட்ட சந்தர்ப்பங்களையும் விளக்குக.